**04-02-2024** ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுவனம்

திறமைச்சித்தி அடைவதற்கு, நீங்கள் சேமித்துள்ள சகல பொக்கிஷங்களினதும் உங்கள் கணக்கைச் சோதியுங்கள்.

இன்று, இந்த நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள சகல இளைய மற்றும் பழைய குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்க்கும்போது, மகிழ்ச்சி அடைகிறார். கல்பம் முழுவதிலும், பிராமண ஆத்மாக்களை விட வேறு எவருக்கும் இந்தப் பாக்கியம் கிடையாது. தேவர்களும் பிராமண வாழ்க்கையை மேன்மையானதாகவே கருதுகிறார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் வாழ்க்கையை ஆரம்பத்தில் இருந்து சோதித்து, நீங்கள் பிறப்பு எடுத்த கணத்தில் இருந்து உங்களின் எதிர்காலம் எத்தனை மேன்மையானது ஆகியுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு குழந்தை பிறந்ததுமே, தனது தாயாலும் தந்தையாலும் பராமரிக்கப்படும் பாக்கியத்தைப் பெறுகிறார். அதன்பின்னர், ஓர் ஆசிரியரால் கற்பிக்கப்படும் பாக்கியத்தை அவர் பெறுகிறார். அதன்பின்னர், ஒரு குருவிடமிருந்து வழிகாட்டல்களை அல்லது ஆசீர்வாதங்களை அவர் பெறுகிறார். குழந்தைகளான உங்களுக்குப் பராமரிப்பையும் கற்பித்தல்களையும் ஆசீர்வாதங்களையும் ஸ்ரீமத்தையும் கொடுப்பவர் யார்? நீங்கள் பரமாத்மாவிடமிருந்தே அவை மூன்றையும் பெறுகிறீர்கள். பராமரிப்பைப் பாருங்கள்! பலரில் ஒரு கைப்பிடி அளவினர் மட்டுமே இறை பராமரிப்பைப் பெறுவதைப் பாருங்கள்! உங்களைத் தவிர, வேறு எவரும் ஆசிரியரான இறைவனிடம் இருந்து கற்பித்தல்களைப் பெறுவதில்லை. நீங்கள் மட்டுமே சற்குருவிடமிருந்து ஸ்ரீமத்தையும் ஆசீர்வாதங்களையும் பெறுகிறீர்கள். எனவே, உங்களின் பாக்கியத்தை நீங்கள் மிகத் தெளிவாக அறிவீர்களா? உங்களின் பாக்கியத்தை உங்களின் விழிப்புணர்வில் வைத்திருந்தவண்ணம் நீங்கள் தொடர்ந்து ஊஞ்சல் ஆடுகிறீர்களா? ‘எனது பாக்கியம் எத்தனை மகத்தானது!’ என்ற பாடலை நீங்கள் பாடுகிறீர்களா?

அமிர்தவேளையில், நீங்கள் விழித்தெழுந்ததுமே, இறையன்பில் திளைத்தவண்ணம் விழித்தெழுகிறீர்கள். இறையன்பே உங்களை விழித்தெழச் செய்கிறது. நீங்கள் உங்களின் நாளை இறையன்புடன் ஆரம்பிக்கிறீர்கள். இந்த அன்பு உங்களிடம் இல்லையென்றால், உங்களால் விழித்தெழவே முடியாது. அன்பே உங்களின் கடிகாரத்தின் மணியாக ஒலிக்கிறது. அன்பெனும் மணி உங்களை விழித்தெழச் செய்கிறது. நாள் முழுவதும், இறை சகவாசம் உங்களை ஒவ்வொரு பணியையும் செய்ய வைக்கிறது. உங்களின் பாக்கியம் எத்தனை மகத்தானது என்றால், உங்களுக்குக் கற்பித்தல்களைக் கொடுப்பதற்காக தந்தை அவரே தனது பரந்தாமத்தை விட்டு இங்கே வருகிறார். இறைவன் உங்களுக்குப் படிப்பிப்பதற்காக ஒவ்வொரு நாளும் தனது வீட்டை விட்டு வருகிறார் என்பதை நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டுள்ளீர்களா? ஆத்மாக்கள் எத்தனை தொலைவில் இருந்து வந்திருந்தாலும், பரந்தாமத்தை விடத் தொலைவான இடம் எதுவும் இல்லை. அதைவிடத் தொலைவாக ஏதாவது நாடு உள்ளதா? அமெரிக்கா அல்லது ஆபிரிக்கா தொலைவில் உள்ளதா? பரந்தாமமே அதியுயர்ந்த இடமாகும். அதிமேலானவரான இறைவன், அதிமேலான இடத்தில்

இருந்து அதிமேலான குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்காக வருகிறார். உங்களின் பாக்கியம் இத்தகையது என்பதை நீங்கள் உணர்கிறீர்களா? சற்குருவின் ரூபத்தில், அவர் உங்களுக்கு ஸ்ரீமத் வழங்குகிறார். அத்துடன் ஒவ்வொரு பணியிலும் தனது சகவாசத்தையும் வழங்குகிறார். அவர் தனது வழிகாட்டல்களை மட்டும் உங்களுக்கு வழங்கவில்லை, ஆனால் அவர் தனது சகவாசத்தையும் உங்களுக்கு வழங்குகிறார். குழந்தைகளான நீங்கள் என்ன பாடலைப் பாடுகிறீர்கள்? நீங்கள் என்னுடன் இருக்கிறீர்களா? அல்லது என்னிடம் இருந்து தொலைவில் இருக்கிறீர்களா? நீங்கள் என்னுடனேயே இருக்கிறீர்கள், அப்படித்தானே? நீங்கள் யார் சொல்வதைக் கேட்கிறீர்கள் என்றால், அது பரம ஆசிரியர் சொல்வதையே ஆகும். நீங்கள் உண்ணும்போது, பாப்தாதாவுடன் சேர்ந்தே உண்கிறீர்கள். நீங்கள் தனியே உண்பீர்களாயின், அது உங்களின் தவறாகும். தந்தை கூறுகிறார்: என்னுடன் சேர்ந்து உண்ணுங்கள்! குழந்தைளான நீங்கள் சத்தியம் செய்துள்ளீர்கள்: 'நான் உங்களுடனேயே வாழ்வேன், நான் உங்களுடனேயே உண்பேன், உங்களுடனேயே பருகுவேன், நான் உங்களுடனேயே உறங்குவேன், அத்துடன் உங்களுடனேயே வீட்டிற்குத் திரும்பிச் செல்வேன்.' நீங்கள் தனியே உறங்கக்கூடாது. நீங்கள் தனியே உறங்கினால், உங்களுக்குள் தீய கனவுகள் ஏற்படும். அல்லது அவற்றில் தீய எண்ணங்கள் இருக்கும். எவ்வாறாயினும், தந்தைக்கு உங்களிடம் அதிகளவு அன்பு இருப்பதனால், அவர் உங்களை எப்போதும் தன்னுடனேயே உறங்கச் சொல்கிறார். தனியே உறங்காதீர்கள். நீங்கள் விழித்தெழும்போது, தந்தையுடனேயே விழித்தெழுகிறீர்கள். நீங்கள் தூங்கச் செல்லும்போது, அவருடன் உறங்குகிறீர்கள். நீங்கள் உண்ணும்போது, அவருடனேயே உண்கிறீர்கள். நீங்கள் உலாவச் செல்லும்போது, அவருடனேயே சேர்ந்து உலாவருகிறீர்கள். நீங்கள் உங்களின் அலுவலகத்திற்கு அல்லது வியாபாரத்தைப் பார்க்கச் செல்லும்போது, நீங்கள் அந்த வியாபாரத்தின் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர் மட்டுமே. தந்தையே அதன் அதிபதி ஆவார். நீங்கள் வேலைக்குப் போகும்போது, உங்களின் பணிப்பாளர், உங்களின் பொஸ், பாப்தாதாவே என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் ஒரு கருவி மட்டுமே. அவரின் வழிகாட்டல்களின் பேரில் எல்லாவற்றையும் செய்கிறீர்கள். நீங்கள் சிலவேளைகளில் சோகமாக இருக்கும்போது, தந்தை உங்களின் நண்பராகி, உங்களுக்கு உற்சாகமூட்ட முயற்சி செய்கிறார். அவர் உங்களின் நண்பராகவும் ஆகுகிறார். நீங்கள் அன்புக்கண்ணீர் சிந்தும்போது, தந்தை வந்து உங்களின் கண்ணீரைத் துடைத்துவிடுகிறார். அவர் முத்துக்களைப் போன்ற உங்களின் கண்ணீரை தனது இதயம் என்ற நகைப்பெட்டியில் வைக்கிறார். நீங்கள் சிலவேளைகளில் விஷமத்தனம் செய்து முரண்டு பிடிக்கும்போது - நீங்கள் இனிமையான முறையிலேயே முரண்டு பிடிக்கிறீர்கள் - தந்தை வந்து உங்களுடன் சமாதானம் செய்து கொள்கிறார். 'அது பரவாயில்லை, குழந்தாய். இப்போது, முன்னேறிச் செல். என்ன நடந்ததோ, அது கடந்து சென்று விட்டது. அதை மறந்துவிடு! கடந்தது கடந்ததாகவே இருக்கட்டும்!' என அவர் சொல்கிறார். இந்த முறையில் அவர் உங்களைச் சமாதானம் செய்கிறார். எனவே, நாள் முழுவதும் நீங்கள் யாருடன் உங்களின் நேரத்தைக் கழிக்கிறீர்கள்? பாப்தாதாவுடன். சிலவேளைகளில், குழந்தைகள், 'பாபா நான் உங்களை மறந்துவிட்டேன்' எனச் சொல்லும்போது, பாப்தாதா வியப்படைகிறார். ஒருபுறம், நீங்கள் ஒன்றிணைந்திருக்கிறீர்கள் எனச் சொல்கிறீர்கள். அப்படியென்றால், நீங்கள் ஒன்றிணைந்திருக்கும் ஒரேயொருவரை உங்களால்

எப்போதாவது மறக்க முடியுமா? நீங்கள் யாராவது ஒருவருடன் இருக்கும்போது, உங்களுடன் இருக்கும் ஒருவரை எப்படி நீங்கள் மறப்பீர்கள்? எனவே, பாபா சொல்கிறார்: ‘சபாஷ், குழந்தைகளே!’ உங்களுடன் ஒன்றிணைந்திருக்கும் ஒரேயொருவரிடமிருந்து உங்களைப் பிரிக்கக்கூடியளவு அதிக வலிமை குழந்தைகளான உங்களிடம் உள்ளது! நீங்கள் ஒன்றிணைந்துள்ளீர்கள், அப்படியிருந்தும், சிறியதொரு மாயை ஒன்றிணைந்திருப்பவர்களைப் பிரித்து விடுகிறாள்!

குழந்தைகள் விளையாடும் விளையாட்டைப் பார்க்கும்போது, பாப்தாதா கூறுகிறார்: உங்களின் பாக்கியத்தை சதா உணர்ந்தவராக இருங்கள். ‘ஆமாம், எனது பாக்கியம் மிக மேன்மையானது’ என நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால், நீங்கள் அந்த எண்ணங்களின் சொரூபம் ஆகுகிறீர்களே அன்றி, அந்த விழிப்புணர்வின் சொரூபம் ஆகுவதில்லை. ‘நான் இது, நான் இது, நான் இது’ என நீங்கள் மிக நன்றாக நினைக்கிறீர்கள். நீங்கள் ஏனையோருக்கும் இதை மிக நன்றாகக் கூறுகிறீர்கள். ஆனால், இப்போது நீங்கள் நினைப்பது மற்றும் கூறுவதன் சொரூபம் ஆகவேண்டும். நீங்கள் அதன் சொரூபம் ஆகுவதில் தோல்வி அடைந்து விடுகிறீர்கள். ஒவ்வொரு விடயத்திலும் ஒரு சொரூபம் ஆகுங்கள்! நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதன் ரூபத்தை அனுபவம் செய்யுங்கள்! உங்களின் அனுபவத்தின் சொரூபம் ஆகுவதே மகத்தான ரூபம் ஆகும். நீங்கள் உங்களின் அநாதியான ரூபத்தில் பரந்தாமத்தில் இருக்கும்போது, நீங்கள் எண்ணங்களின் சொரூபமாக இருப்பதில்லை. ஆனால், விழிப்புணர்வின் சொரூபமாகவே இருப்பீர்கள். ‘நான் ஓர் ஆத்மா, நான் ஓர் ஆத்மா’ என்றேனும் நீங்கள் நினைக்க வேண்டியதில்லை. நீங்கள் அந்த ரூபமாகவே இருப்பீர்கள். இந்த நேரத்தில் நீங்கள் செய்யும் முயற்சியின் சொரூபமாக நீங்கள் ஆரம்பத்தில் இருப்பீர்கள். ‘நான் ஒரு தேவி, நான் ஒரு தேவன்’ என நீங்கள் நினைக்க வேண்டியதில்லை. நீங்கள் அந்த ரூபமாகவே இருப்பீர்கள். ஆகவே, உங்களின் அநாதியான ரூபத்தினதும் ஆதி ரூபத்தினதும் சொரூபமாக நீங்கள் இருப்பதனால், இந்த வேளையிலும் ஒரு சொரூபம் ஆகுங்கள். அதன் சொரூபம் ஆகுவதன் மூலம், உங்களின் நற்குணங்களும் சக்திகளும் இயல்பாகவே வெளிப்படும். ஏதாவதொரு பதவி வகிக்கும் ஒருவர் தனது ஆசனத்தில் அமர்ந்திருக்கும்போது, அந்த வேலையின் திறமைகளும் கடமைகளும் இயல்பாகவே வெளிப்படும். எனவே, நீங்களும் சதா உங்களின் ரூபம் என்ற ஆசனத்தில் நிலையாக இருக்கும்போது, ஒவ்வொரு நற்குணமும் ஒவ்வொரு சக்தியும் மற்றும் ஒவ்வொரு வகையான போதையும் இயல்பாகவே வெளிப்படும். நீங்கள் இதற்காகக் கடினமாக உழைக்கவேண்டியதில்லை. இதுவே இயல்பான பிராமண சுபாவம், பல பிறவிகளின் ஏனைய வகையான சுபாவங்களை முடித்தல் எனப்படுகிறது. பிராமண வாழ்க்கையின் இயல்பான சுபாவம் என்னவென்றால், நற்குணங்களின் சொரூபமாகவும் சகல சக்திகளின் சொரூபமாகவும் ஆகுவதாகும். ஏனைய பழைய வகைகளான சுபாவங்கள் அனைத்தும் பிராமண வாழ்க்கையின் சுபாவம் இல்லை. ‘எனது சுபாவம் இப்படி உள்ளது’ என நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், ‘எனது சுபாவம்’ எனக் கூறுவது யார்? அது பிராமணரா அல்லது ஷத்திரியரா? அல்லது, தனது சென்ற பிறவியின் விழிப்புணர்வின் சொரூபம் ஆகுகின்ற ஆத்மாவா இதைக் கூறுவது? பிராமணர்களின் சுபாவமே, தந்தை பிரம்மாவின் சுபாவம் ஆகும். எனவே, எனது சுபாவம் இப்படிப்பட்டது என நீங்கள் சொல்லும்போது, பிராமண வாழ்க்கையில்

உங்களின் சொந்த சுபாவம் உங்களுக்கு இருக்க முடியுமா என நினைத்துப் பாருங்கள். நீங்கள் உங்களின் கடந்தகால சுபாவத்தை முடிப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள் என்றால், உங்களின் கடந்தகால சுபாவம் இப்போதும் வெளிப்படுமாக இருந்தால், நீங்கள் அந்த வேளையில் ஒரு பிராமணர் இல்லை, ஆனால் ஒரு ஷத்திரியராக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்த கொள்ள வேண்டும். நீங்கள் கடந்த காலத்தை முடிப்பதற்குப் போராடுகிறீர்கள். எனவே, நீங்கள் சிலவேளைகளில் பிராமணர்களாகவும் ஏனைய வேளைகளில் ஷத்திரியர்களாகவும் இருக்கிறீர்களா? நீங்கள் உங்களை என்னவென்று அழைக்கிறீர்கள்: ஷத்திரிய குமார்களா அல்லது பிரம்மாகுமார்களா? நீங்கள் யார்? நீங்கள் ஷத்திரிய குமார்களா? நீங்கள் பிரம்மாகுமார்களும் பிரம்மாகுமாரிகளும் ஆவீர்கள். உங்களுக்கு வேறெந்தப் பெயரும் இல்லை. நீங்கள் யாரையாவது, 'ஹே ஷத்திரியக் குமார், இங்கே வாருங்கள்!' என்று அழைப்பீர்களா? நீங்கள் எப்போதாவது இப்படிச் சொல்கிறீர்களா? அல்லது, உங்களுக்குள்ளேயே, 'நான் ஒரு பிரம்மாகுமார் இல்லை, நான் ஒரு ஷத்திரியகுமார்' எனச் சொல்கிறீர்களா? ஒரு பிராமணர் என்றால், தந்தை பிரம்மாவின் சுபாவத்தை ஒத்த சுபாவத்தைக் கொண்டிருப்பதாகும். அந்த வார்த்தைகளை ஒருபோதும் சொல்லாதீர்கள். அவற்றைத் தவறுதலாகவேனும் சொல்லாதீர்கள். 'நான் என்ன செய்வது? எனது சுபாவம் இப்படிப்பட்டது' என ஒருபோதும் நினைக்காதீர்கள். இது சாக்குப்போக்கு சொல்வதாகும். இவ்வாறு சொல்வதே, உங்களை விடுவிப்பதற்கென்று சாக்குப்போக்குச் சொல்வதாகும். நீங்கள் புதிய பிறவி எடுத்துள்ளீர்கள். எனவே, உங்களின் புதிய வாழ்க்கையில் பழைய சுபாவம் எப்படி வெளிப்பட முடியும்? நீங்கள் சம்பூரணமாக இறக்கவில்லை என்பதே இதன் அர்த்தமாகும். நீங்கள் இன்னமும் சிறிது உயிருடன் இருக்கிறீர்கள். அத்துடன் உங்களின் சிறிதளவே இறந்துள்ளது. பிராமண வாழ்க்கை என்றால், தந்தை பிரம்மாவின் ஒவ்வோர் அடியுமே, பிராமணர்களின் அடிகள் ஆகும்.

பாப்தாதா உங்களின் பாக்கியத்தைப் பார்க்கிறார். அது மேன்மையான பாக்கியமாகும். ஆகவே, அந்த வார்த்தைகள் இந்த பாக்கியத்தின் முன்னால் சரியாகத் தோன்றவில்லை. நீங்கள் இந்த வருடத்தை முக்தி வருடமாகக் கொண்டாடுகிறீர்கள், அல்லவா? நீங்கள் என்ன வகுப்புக்கள் கொடுக்கிறீர்கள்? இது முக்தி வருடம், சுதந்திரத்திற்கான வருடம். இது இப்போது முக்தி வருடமா? அல்லது அது 1999 இல்தான் வருமா? 1998 ஏ முக்தி வருடமாகும். இதுவே முக்தி வருடம் என நினைப்பவர்கள், உங்கள் கைகளை உயர்த்துங்கள்! பாருங்கள்! உங்களின் கைகளை உயர்த்துவது மிகவும் இலகுவானது. நீங்கள் இந்த ஒன்றுகூடலில் அமர்ந்திருந்து சந்தோஷமாக ஆடிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் உங்களின் கைகளை உயர்த்துகிறீர்கள். இப்போது, உங்களின் கைகளை உயர்த்துவதுடன் உங்களின் இதயங்களில் இந்தச் சத்தியத்தையும் செய்யுங்கள்: என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும், நீங்கள் முக்தி வருடத்திற்கான உங்களின் சத்தியத்தை மீற மாட்டீர்கள். நீங்கள் இத்தகைய உறுதியான சத்தியத்தைச் செய்துள்ளீர்களா? நீங்கள் உங்களின் கைகளை உயர்த்தும்போது கவனமாக இருங்கள்! இந்தத் தொலைக்காட்சியில் அது பதிவு செய்யப்பட்டுள்ளதோ இல்லையோ, பாப்தாதா உங்களின் புகைப்படத்தை எடுத்துள்ளார். ஆகவே, இத்தகைய பலவீனமான வார்த்தைகளில் இருந்து விடுதலை பெறுங்கள்! உங்களின் வார்த்தைகள் தந்தையுடையதைப் போல்

இனிமையாக இருக்க வேண்டும். ஒவ்வோர் ஆத்;மாவிற்கும் உங்களின் வார்த்தைகள் நல்லாசிகளால் நிறைந்திருக்க வேண்டும். இதுவே அர்த்தம் நிறைந்த வார்த்தைகளைக் கொண்டிருத்தல் எனப்படுகிறது. நடக்கும்போதும் அசையும்போதும் சாதாரணமான வார்த்தைகளைப் பேசாதீர்கள். சடுதியாக உங்களிடம் வருகின்ற எவரும், இவை வார்த்தைகளா அல்லது முத்துக்களா என வியக்க வேண்டும். நல்லாசிகள் நிறைந்த வார்த்தைகள் வைரங்களையும் முத்துக்களையும் போன்றவை. சகல பொக்கிஷங்களையும் நீங்கள் சேகரிப்பதற்கு இப்போது மிகக் குறுகிய காலமே எஞ்சியுள்ளது என பாப்தாதா பல தடவைகள் குறிப்பிட்டுள்ளார். இந்த வேளையில், நீங்கள் காலம், எண்ணங்கள், வார்த்தைகள், ஞானச் செல்வம், யோக சக்திகள், தெய்வீக வாழ்க்கைக்கான சகல நற்குணங்களின் பொக்கிஷங்கள் என சகல பொக்கிஷங்களையும் சேகரிக்காவிட்டால், இந்தப் பொக்கிஷங்கள் அனைத்தையும் சேமிப்பதற்கு உங்களால் இலகுவாக வேறொரு நேரத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடும். நாள் முழுவதும், ஒவ்வொரு பொக்கிஷத்தினதும் உங்களின் கணக்கைச் சோதித்துப் பாருங்கள். உங்களுக்கு எவ்வளவு இலாபம் உள்ளது எனப் பார்ப்பதற்கு உங்களின் பௌதீகப் பணத்தின் கணக்கை நீங்கள் சோதிப்பதைப் போல், உங்களின் பொக்கிஷங்களின் ஒவ்வொரு கணக்கையும் சோதித்து எவ்வளவு பொக்கிஷங்களை நீங்கள் சேமித்துள்ளீர்கள் எனப் பாருங்கள். உங்களிடம் சகல பொக்கிஷங்களும் இருக்க வேண்டும். நீங்கள் திறமைச் சித்தி எய்த விரும்பினால், ஒவ்வொரு பொக்கிஷத்தினதும் உங்களின் சேமிப்புக்கணக்கு, நிறைந்திருக்க வேண்டும். அதன் மூலம், 21 பிறவிகளுக்கு சேமிக்கப்பட்ட பொக்கிஷக்கணக்கின் பலனை உங்களால் அனுபவம் செய்ய முடியும். காலத்தின் 'மிகவும் தாமதமாகிவிட்டது' என்ற மணி இன்னமும் அடிக்கவில்லை. ஆனால் அது அடிக்கும். அந்த நாள் அல்லது திகதி என்னவென்று உங்களுக்கு முன்கூட்டியே சொல்லப்பட மாட்டாது. சடுதியாக, 'மிகவும் தாமதம் ஆகிவிட்டது!' என்று அறிவிக்கப்படும். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? அந்த வேளையில் உங்களால் சேமிக்க முடியுமா? நீங்கள் எவ்வளவுதான் முயன்றாலும், உங்களுக்கு நேரம் இருக்காது. இதனாலேயே, பாப்தாதா உங்களுக்கு இந்தச் சமிக்கையைப் பல தடவைகள் கொடுக்கிறார்: சேமியுங்கள்! சேமியுங்கள்! சேமியுங்கள்! இந்த வேளையில் உங்கள் ஒவ்வொருவரினதும் பட்டம் என்னவென்றால், 'சகல சக்திகளையும் கொண்டவர்' என்பதாகும். 'சில சக்திகளைக் கொண்டவர்' என்பதல்ல. எதிர்காலத்தில், நீங்கள் சகல நற்குணங்களாலும் நிரம்பியவராகவே இருப்பீர்கள். சில நற்குணங்கள் நிரம்பியவராக அல்ல. நீங்கள் இந்தப் பொக்கிஷங்கள் எல்லாவற்றையும் இப்போதே சேமிக்க வேண்டும். நீங்கள் சகல நற்குணங்களையும் சக்திகளையும் இப்போதே சேமிக்க வேண்டும். ஒவ்வொரு பொக்கிஷமும் ஒரு நற்குணத்துடன் அல்லது ஒரு சக்தியுடன் தொடர்புடையது. எப்படி நீங்கள் சாதாரணமான வார்த்தைகளைப் பேசுவதில்லையோ, ஆனால் இனிமையான வார்த்தைகளைப் பேசும் நற்குணத்தைக் கொண்டிருக்கிறீர்களோ, அதேபோல், ஒவ்வொரு பொக்கிஷத்திற்கும் இந்தத் தொடர்பு உள்ளது.

பாப்தாதா குழந்தைகளான உங்களை நேசிப்பதனால், அவர் இந்த சமிக்கையை மீண்டும் மீண்டும் உங்களுக்கு வழங்குகிறார். இன்றைய ஒன்றுகூடலில், பல்வகையினரும் இருக்கிறார்கள். சிறுவர்கள் இருக்கிறார்கள். அத்துடன் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். ஏனென்றால், ஆசிரியர்களே

அர்ப்பணித்தவர்கள் ஆவார்கள். குமாரிகளும் அத்துடன் இல்லறத்தவர்களும் கூட வந்துள்ளார்கள். பல்வகையினரும் இருக்கிறார்கள். அச்சா.

எல்லோருக்கும் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது நல்லதே. இது மிகவும் நல்லது. குழந்தைகள் நீண்ட காலத்திற்கு முன்னரே ஒரு வேண்டுகோள் விடுத்தீர்கள், அப்படித்தானே? 'பாபாவைச் சந்திப்பதற்கு எப்போது எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்?' என நீங்கள் கேட்டீர்கள். எனவே, இது நல்லது! பல்வகையினரின் பூங்கொத்து தந்தையின் முன்னால் உள்ளது. முழு உலகிலும் உள்ள ஆசிரியர்களுக்காக பாப்தாதா ஒரு தூய ஆசையைக் கொண்டுள்ளார் - முறைப்பாடுகளின் பைல் இப்போது முடிவடைய வேண்டும். பாப்தாதாவிடமும் பல பைல்கள் உள்ளன. எனவே, இந்த வருடம், உங்களின் முறைப்பாடுகளின் பைல் முடிவடைய வேண்டும். நீங்கள் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். நன்றாக இருப்பதற்கும் மேலாக, நீங்கள் தௌ;ளத்தெளிந்தவர்கள் ஆகவேண்டும். நீங்கள் இதை விரும்புகிறீர்கள்தானே? மற்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்களுடன் எப்படிப் பழகுவது எனக் கற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்கள் எதைச் செய்தாலும், அவர்கள் மீண்டும் மீண்டும் உங்களுக்குத் தடைகளை உருவாக்கினாலும், அந்தத் தடைகளுக்காக நீங்கள் எவ்வளவிற்கு உங்களின் நேரத்தைப் பயன்படுத்தப் போகின்றீர்கள்? அவற்றுக்கும் நிறைவு விழா நடக்க வேண்டும். ஆகவே, மற்றவர்களைப் பார்த்து, ஒவ்வொருவரும் என்ன செய்கிறார் எனப் பார்க்காதீர்கள். 'நான் என்ன செய்வது?' அவர் ஒரு மலை போன்றிருந்தால், நான் அவரிடமிருந்து விலகிச் செல்ல வேண்டும். மலை அசையப் போவதில்லை! 'அவர் மாறினால், நான் மாறுவேன். மலை விலகினால் மட்டுமே என்னால் முன்னேற முடியும்' என்று நினைக்காதீர்கள். மலை அசையப் போவதுமில்லை. உங்களால் உங்களின் இலக்கைச் சென்றடையவும் முடியாது. ஆகவே, அந்த ஆத்மாவிற்காக உங்களிடம் தூய உணர்வுகள் இருக்குமாயின், ஒரு சமிக்கையைக் கொடுத்து, உங்களின் மனதையும் புத்தியையும் வெறுமையாக்கிக் கொள்ளுங்கள். தடைகளின் சொரூபங்களாக இருப்பவர்களைப் பற்றிச் சிந்திப்பதில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளாதீர்கள். எல்லாமே வரிசைக்கிரமமாக இருப்பதனால், ஒவ்வொருவரின் ஸ்திதியும் நிச்சயமாக வரிசைக்கிரமமாகவே இருக்கும். எவ்வாறாயினும், நீங்கள் முதலாம் இலக்கத்தவர் ஆகவேண்டும். உங்களை மாற்றிக் கொள்ளுங்கள், தடைகளாக இருப்பவர்களுக்காகவும் வீணான எண்ணங்களைக் கொண்டுள்ள ஆத்மாக்களுக்காகவும் நல்லாசிகளைக் கொண்டிருங்கள். இதற்குச் சிறிதளவு நேரமும் சிறிதளவு முயற்சியுமே தேவைப்படும். ஆனால், இறுதியில், சுய மாற்றத்தை ஏற்படுத்துபவர்களின் கழுத்துகளில் வெற்றி மாலைகள் போடப்படும். உங்களின் நல்லாசிகளால் அந்த ஆத்மாக்களில் உங்களுக்கு மாற்றத்தை ஏற்படுத்த முடியுமாக இருந்தால், அப்படிச் செய்யுங்கள். இல்லாவிட்டால், ஒரு சமிக்கையை மட்டும் கொடுங்கள்! உங்களின் பொறுப்பை முடிவிற்குக் கொண்டு வாருங்கள். உங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி, தொடர்ந்து முன்னால் பறந்து செல்லுங்கள். இந்தத் தடையும் பற்றின் தங்க நூலேயாகும். இது உங்களைப் பறக்க அனுமதிப்பதில்லை. இது சத்தியம் என்ற திரைக்குப் பின்னாலுள்ள சூட்சுமமான நூலாகும். 'இது உண்மை, அப்படித்தானே? இது எல்லா வேளையும் நடைபெறுகிறது. இது நடக்கக்கூடாது' என நீங்கள் நினைக்கிறீர்கள். எவ்வாறாயினும், எவ்வளவு காலத்திற்குத்தான் நீங்கள் அவை அனைத்தையும்

பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றீர்கள்? எவ்வளவு காலத்திற்கு அவற்றை நிறுத்தப் போகின்றீர்கள்? இப்போது, அந்தச் சூட்சும இழைகளில் இருந்து உங்களை விடுவித்து, முக்தி வருடத்தைக் கொண்டாடுங்கள். இதனாலேயே, பாப்தாதா உங்களுடன் வெவ்வேறு விழாக்களைக் கொண்டாடுகிறார். அத்துடன் உங்களின் எதிர்பார்ப்புகள், ஆசைகள், ஊக்கம் மற்றும் உற்சாகத்தை நிறைவேற்றுகிறார். இந்த வருடத்தின் கடைசி விழா, முக்தி வருடத்திற்கான விழாவாகவே இருக்கும். விழாக்களின்போது, தாதிகள் பரிசுகளைக் கொடுக்கிறார்கள். எனவே, முக்தி வருடம் என்ற விழாவிலும், உங்களின் முழுமை என்ற பரிசை பாப்தாதாவிற்குக் கொடுங்கள். அச்சா.

இறை பராமரிப்பு, கற்பித்தல்கள், ஸ்ரீமத் என்பவற்றின் பாக்கியத்தின் உரிமையைக் கொண்டுள்ள எங்கும் உள்ள விசேடமான ஆத்மாக்கள் எல்லோருக்கும், தந்தைக்குச் சமமாக இருந்து தமது எண்ணங்களின் சொரூபங்களாக தங்களை ஆக்கிக் கொள்ளும் ஆத்மாக்களுக்கும், இறைவனின் அக சக்தியால் தாம் செய்யும் சேவையிலும் தமக்காகவும் இலகுவாக வெற்றியீட்டும் கருவி சேவையாளர் ஆத்மாக்களுக்கும் சதா தந்தையைத் தமது ஒன்றிணைந்த ரூபத்தில் அனுபவம் செய்பவர்களுக்கும், சதா சகவாசம் என்ற உறவுமுறையைப் பூர்த்தி செய்யும் சகபாடிக் குழந்தைகளுக்கும், பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் நமஸ்காரங்களும் உரித்தாகட்டும்.

ஆசீர்வாதம்: நீங்கள் உங்களின் உறவுமுறைகளிலும் தொடர்புகளிலும் திருப்தி என்ற உங்களின் சிறப்பியல்பால் மாலையில் கோர்க்கப்படுகின்ற ஒரு திருப்தி இரத்தினம் ஆகுவீர்களாக.

சங்கமயுகம், திருப்திக்குரிய யுகமாகும். தங்களுடன் திருப்தியாக இருப்பதுடன் தமது உறவுகளிலும் தொடர்புகளிலும் சதா திருப்தியாக இருந்து, மற்றவர்களையும் திருப்திப்படுத்துபவர்களும் மாலையில் கோர்க்கப்படுகிறார்கள். ஏனென்றால், மாலையானது உறவுமுறைகளினூடாகவே உருவாக்கப்படுகிறது. ஒரு மணி, அடுத்த மணியுடன் தொடர்பில் இல்லாவிட்டால், ஒரு மாலையை உருவாக்க முடியாது. ஆகவே, ஒரு திருப்தி இரத்தினம் ஆகுங்கள். சதா திருப்தியாக இருந்து, எல்லோரையும் திருப்திப்படுத்துங்கள். ஒரு குடும்பத்தில் இருப்பதன் அர்த்தம், திருப்தியாக இருப்பதுடன் எல்லோரையும் திருப்திப்படுத்துவதாகும். எந்த வகையான முரண்பாடுகளும் இருக்கக்கூடாது.

சுலோகம்: தடைகளின் கடமை வருவது. உங்களின் கடமை, தடைகளை அழிப்பவர்கள் ஆகுவது.

**--ஓம் சாந்தி---**

ஓம் சாந்தி